**கவனிக்க.-** 2017.05.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2020 - 2017 මැයි මස 19 වැනි සිකුරාදා - 2017.05.19

2020 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 890 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 893 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 899 |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் | 890 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) ஸ்ரீ லங்கா கமநல நிறுவனம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, மே மாதம் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2017, மே மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, யூன் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மே மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால்மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

889-B 81171-5403 (2017/05)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

### கோட்டை புகையிரத நிலையத்தில் உத்தேச கழிவறைகளை நிர்மாணித்தல்

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 'கோட்டை புகையிரத நிலையத்திலுள்ள உத்தேச கழிவறைகளை நிர்மாணிப்பதற்காக' தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை புகையிரத சேவைகள் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் ( உயர் மட்டத்திலானது) தற்போது அழைக்கின்றார்.

தகர்க்கும் வேலை, அகழ்வு மற்றும் நில வேலை, கொங்கிறீட் வேலை, மேசன் வேலை, கட்டமைக்கப்பட்ட இரும்பு வேலை, பூர்த்தி செய்யும் வேலைகள், கூரை மூடும் வேலைகள், குழாய் வேலைகள் , மின்சார வேலைகள் அனைத்துப் பொருள் வழங்களுடனான பொறிமுறை வேலைகள் போன்ற பணிகளை மேற்படி வேலை உள்ளடக்கியிருப்பதுடன் விபரக்குறிப்பு , படவரைபு மற்றும் தொகைப் பட்டியலிற்கு அமைவாக உழைப்பு பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

2. ஒப்பந்தம் கையளிக்கத் தகுதி பெற, வெற்றியாளரான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைக் கொண்டிருக்கவும் வேண்டும்.

* ஒப்பந்தக்காரர்கள் நிர்மாணிப்பதற்காக தரம் 05 இல் நிர்மாணிப்புக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) முன்னைய ICTAD தம்மைப் பதிவு செய்து கொண்டிருக்க வேண்டும்.

* கடந்த மூன்று வருடங்களில் நிகரானதும் சிக்கல் மிகு தன்மைகளைக் கொண்டதுமான ஆகக் குறைந்தது 01 செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்வதில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. மீளளிக்கப்படாத 5000.00 ரூபா மட்டுமேயான ஆவணக் கட்டணம் செலுத்தப்பட்டு கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சியசாலை அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களிலேயே 2017.06.01 அன்று பி.ப. 3.00 மணிவரை விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் 2017.06.02 அன்று பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

5. கொழும்பு 10,ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவை, களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பிறகு உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சமயம் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

6. கீழேயுள்ள முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவோ அல்லது நேரில் வந்து கையளிக்கப்படவோ வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,( உயர் மட்டத்திலானது)
இலங்கைப் புகையிரத சேவைகள்,
இலங்கை புகையிரத சேவைகள் களஞ்சியசாலைள் அத்தியட்சகர் அலுவலகம்,
த.பெ.இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

7. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவை களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத சேவைக் களஞ்சியசாலைகள் அத்தியட்சகர் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள்: 2438078, 2436818
தொலைநகல் இல.: 2432044, ஈமெயில்: srs.slr @ gmali.com
இணையத்தளம்: www.railway.gov.lk

தலைவர்
திணைக்களப் பெறுகைக் குழு( உயர் மட்டத்திலானது)

இலங்கை புகையிர சேவைகள்.
குறி .இல. SRS/ F 7485

5-478

---

# ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும்

**சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் 2017, யூலை மாதம் முதல் 2018, யூன் மாதம் வரையான காலப் பகுதிக்கு கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை**

2017, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2018, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தகைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப்பணத்தை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு அதன் இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு " .................... இலக்கமுள்ள ..................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்பட்டு 2017.05.25 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு சிலாபம் பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சிலாபம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயல்படுதல் வேண்டும்.

5. 2017, மே 25 ஆந் திகதி காலை 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த வேளை கேள்விப்பத்திரதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் கள்ளுத் தவறணைகள் ஏதும் இருப்பின் அவற்றுக்கான மீள் விற்பனை 2017.06.30 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்களை சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
தொலைபேசி இல. 032- 2223205 /032- 2222138

டி.எம்.ஏ. கே.திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2017, மே 03.

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | சிலாபம் ந.வட் .இலக்கம் 2 | இச்சம்பிட்டி | 2017.05.25 மு.ப.10.30 | 2,000 |
| 2 | சிலாபம் ந.வட் .இலக்கம் 3 | பிரிவினுள் வேறொரு இடம் தேவைப் பட்டுள்ளது | 2017.05.25 மு.ப.10.30 | 1,000 |
| 3 | பிடிகல கோரளே | ஒலிதளுவ | 2017.05.25 மு.ப.10.30 | 250 |

5- 521

## மஹவெவ பிரதேச செயலகப் பிரிவில் 2017 ஆடி மாதம் 1 ஆந் திகதி முதல் 2018 ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2017/2018

*2017, ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2018, ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் கள்ளுத்தவறணை சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளு வரியை விற்கும் நிபந்தனைகளுக்கு அமைவாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடும் கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிட்டமைக்கான பற்றுச்சீட்டும் குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலையின் 15% க்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் “.............இல. ............கள்ளுத் தவறணைக்கான கேள்வி ” என்று குறிப்பிட்டு 2017.05.23 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லாதவிடத்து அக்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு மஹவெவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் தாக்கல் செய்வது 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2017.05.23ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் கேள்விப்பத்திரதாரர் அனைவரும் மஹவெவ செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின் அவற்றுக்கான மீள் விற்பனை 2017.06.13ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நடைபெறும்.*

*7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மஹவெவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
தொலைபேசி இல.: 032-2254231*

*ஸ்ரீமாலி மல்லவஆரச்சி,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.*

*பிரதேச செயலகம்,
மஹவெவ,
2017, ஏப்பிறல் 21.*

**அட்டவணை**

| தவறணையின் இல. | கிராமம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|
| 16 | அடப்பரகம | 500 0 |
| 17 | மட்டாகொட்டுவ | 500 0 |
| 18 | தொடுவாவ - வடக்கு | 1,000 0 |

*5-600*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

கொக்கல மெனுபெக்டரிங் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 4099), லீடிங் லேடி இன்டிமேட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், (பீவீ 66709), எஸ் ஜீ ஐ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 4350), பெயாமவுன்ட் எபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 78001), எலயர் எபரல் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 15944) மற்றும் பெயாமவுன்ட் பெசன் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 77994) என்பவற்றை ஸ்டார் காமண்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 7213) என்பதுடன் ஒன்றிணைத்தல்

கொக்கல மெனுபெக்டரிங் (பிறைவேட்) லிமிட்டட் , லீடிங் லேடி இன்டிமேட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், , எஸ் ஜீ ஐ லங்கா (பிறைவேட்) லிமிட்டட் , பெயாமவுன்ட் எபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், எலயர் எபரல் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் பெயாமவுன்ட் பெசன் (பிறைவேட்) லிமிட்டட் என்பவற்றை ஸ்டார் காமண்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 7213) என்பதுடன் ஒன்றிணைத்தல் சம்பந்தமாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. ஒன்றிணைக்கப்பட்ட கம்பனி ஸ்டார் காமண்ட்ஸ் பிறைவேட் லிமிட்டட் (பீவீ 2713) என்பதாகும். ஒன்றிணைத்தல் பயனுறும் திகதி 2017, ஏப்பிறல் 5 ஆம் திகதியிலிருந்து ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம், கொழும்பு 3, யுனிட்டி இடம், 5 ஆம் மாடி, இல. 1 அ ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-424

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : சீ.ஜீ.லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 120990
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.03.20
பதிவு முகவரி : " தவெவட்ரீ ", 141/9, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2, இலங்கை

கம்பனிச் செயலாளர்.

5-427

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : பிரிட்டிஷ் ப்ரீ ச்கூல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 115308
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.07.28
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 51/2, ஹேன ரோட், கல்கிஸ்ஸை

செயலாளர்.

5-430

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : குரு க்ரெனயிட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 121778
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.04.21
பதிவு முகவரி : இல. 27/1, பெப்பிலியான வீதி, நெதிமாலை, தெஹிவளை

டபிள்யு. எஸ். வீரமன்,
கம்பனிச் செயலாளர்.

5-431

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் தனியார் கம்பனி 2017.03.17 ஆம் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : ஆர்பிகோ நெச்சுரல் எக்ஸ்ட்ரெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. : பீவீ 120906
பதிவு முகவரி : இல. 310, ஹெலெவல் ரோட், நாவின்ன, மஹரகம

ரிச்சர்ட் பீரிஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட் லிமிட்டட்)
கம்பனிச் செயலாளர்கள்.

5-480/1

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் தனியார் கம்பனி 2017.03.20 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: ஆர்பி சி புரொப்பட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவு இல. :பீவீ 120989
பதிவு முகவரி : இல. 310, ஹைலெவல் ரோட், நாவின்ன, மஹரகம

ரிச்சர்ட் பீரிஸ் குரூப் சேர்விசஸ்
(பிறைவேட் லிமிட்டட்)
கம்பனிச் செயலாளர்கள்.

5- 480/2

---

**அறிவித்தல்**

2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி ஒரிஜின் கிரடிட் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் இல. 10 சீ, வைத்தியசாலை வீதி, வேத்தேவ, மதுகம என்ற முகவரியில் பீவீ 119116 என்ற இலக்கத்தின் கீழான மேற்படி கம்பனியானது கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இலங்கைப் பொது மக்களிற்கு அறிவிக்கப் படுகின்றது.

சஞ்ஜீவ களுஆரச்சி
கம்பனிச் செயலாளர்.

5-481

---

**நெய்லி டேவிஸ் கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் லங்கா (பிறைவேட்)லிமிட்டட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

நெய்லி டேவிஸ் கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் லங்கா ( பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி பீவி 121606 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது எம் & என் கட்டிடம் ( 5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 03 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நான் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

கந்தையா நீலகண்டன்
தவிசாளர்,

எம் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என் கட்டிடம்( 5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு - 00300.

5- 502

---

**நோர்த்ஈஸ்ட் இன்ஸ்டியுட் ஒப் டெக்னொலொஜி (பிறைவேட்)லிமிட்டட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

நோர்த்ஈஸ்ட் இன்ஸ்டியுட் ஒப் டெக்னொலொஜி ( பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி பீவி 121608 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது எம் & என் கட்டிடம் (5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 03 இல் அமைந்துள் ளது என்பதையும் இத்தால் நான் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

கந்தையா நீலகண்டன்
தவிசாளர்,

எம் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என் கட்டிடம்( 5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு - 00300.

5- 503

---

**டீ பீ கே சொலுசன்ஸ் (பிறைவேட்)லிமிட்டட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

டீ பீ கே சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி பீவி 121892 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது எம் & என் கட்டிடம் ( 5 ஆம் மாடி), டீல் பிளேஸ், கொழும்பு 03 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நான் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

சரவணன் நீலகண்டன்
பணிப்பாளர்,

எம் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டரீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் & என் கட்டிடம்( 5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு - 00300.

5- 504

**நிலோனா ப்ரோபடி டிவலப்மென்ட் (பிறைவேட்)லிமிட்டட்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-*

*நிலோனா ப்ரோபடி டிவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி பீவி 120534 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது இல. 260, டொரிங்டன் அவென்யு, கொழும்பு 07 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நான் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.*

*சரவணன் நீலகண்டன்*
*பணிப்பாளர்,*

*எம் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டறீஸ்*
*(பிறைவேட்) லிமிட்டட்,*
*கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.*

*எம் & என் கட்டிடம்( 5 ஆம் மாடி),*
*இல. 2, டீல் பிளேஸ்,*
*கொழும்பு - 00300.*

*5- 505*

---

**ஈ- பிலட்போம் களம்பு லிமிட்டட்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-*

*ஈ- பிலட்போம் களம்பு லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி பீபீ 5386 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது இல. 117, ஹுணுப்பிட்டிய லேக் ரோட், கொழும்பு 02 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நான் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.*

*சரவணன் நீலகண்டன்*
*பணிப்பாளர்,*

*என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டறீஸ்*
*(பிறைவேட்) லிமிட்டட்,*
*கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.*

*எம் & என் கட்டிடம்( 5 ஆம் மாடி),*
*இல. 2, டீல் பிளேஸ்,*
*கொழும்பு - 00300.*

*5- 506*

**ஸன்சக்தி ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைத்தல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர் : ஸன்சக்தி ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.04.25*
*பதிவிலக்கம் : பீவீ 121821*
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 651, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை*

*சத்தியராஜி கமலநாதன்,*
*கம்பனிச் செயலாளர்.*

*5- 583*

---

**கடன்கொடுநர் கூட்டம் தொடர்பான அறிவித்தல்**

*ஸ்டடி பிளஸ் (பிறைவேட்) லிமிட்டட்- பீவீ 98366*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334 ஆம் பிரிவிற்கு அமைவாக கம்பனியின் கடன்கொடுநரின் தன்னிச்சையான முடிவுறுதலின் காரணமாக கம்பனியின் தன்னிச்சையான முடிவுறுத்தல் தொடர்பான பொதுக்கூட்டமானது 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இல. 453/1, ஹவ்லொக் ரோட், கொழும்பு 6 இல் இடம்பெறவுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*பணிப்பாளர்.*

*5- 588*

---

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் முன்னைய பெயர் : பூரணி இன்ஸ்பிரேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனியின் இலக்கம் : பீவீ 19302*
*பதிவு முகவரி : இல. 456ஏ, கெசெல்வத்தை , கோணஹேன, கடவத்தை*
*கம்பனியின் புதிய பெயர் : புரகோன்ஸ் இன்பொடெக் (பிறைவேட்) லிமிட்டட்*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*5- 590*

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி 2017.04.07 அன்று கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : அயோனிக்ஸ் இண்டநெசனல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 121426
பதிவு முகவரி : பாாட்க்லண்ட் லெவல் 15பீ, பார்க் வீதி, கொழும்பு 2

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 592

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், இன்டேவ் மோல்சிப் சர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட2016.12.16 அன்று கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : இன்டெவ் மோல்சிப் சர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 118725
பதிவு முகவரி : லெவல் எய்ட், ‘வேலியன்ட் டவர்ஸ்’46/7, நவம் மாவத்தை, கொழும்பு 2

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 593

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் சீஃப்வே கட்டுநாயக ( பிறைவேட்) லிமிட்டட் 2017.03.31ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சீஃப்வே கட்டுநாயக (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 121177

பதிவு முகவரி : ரிங் வீதி 3, 11 ஆம் கட்டம் ஈ.பி. இஸட் கட்டுநாயக

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

சீஃப்வே கட்டுநாயக (பிறைவேட்) லிமிட்டட்

5- 594

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : எம் கே எம் ஹோல்டிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 120660
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.03.08
பதிவு முகவரி : 122, ஹெவ்லொக் வீதி, கொழும்பு -05

எம் கே எம் ஹோல்டிங்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

5- 595

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் , விடுக்கப்படும் அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : மெடிஎல்ப் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 121804
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017, ஏப்பிறல் 24
பதிவு அலுவலகம் : 172/3, பாணந்துறை வீதி, ஹொரணை

பணிப்பாளர்.

5- 623

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (5) ஆம் பிரிவிற்கமைவாக.-

கம்பனியின் பெயர் : செட்ஸ் பாமா (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 117465
பதிவு திகதி : 2016.10.20
பதிவு முகவரி : இல. 85/11, வெலியமுன வீதி,
ஹெந்தளை, வத்தளை

செயலாளர்.

5-625

## அறிவித்தல்

2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி ரோஹித இன்வெஸ்ட்மன்ட் என்ட் பிரொபட்டி (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் மீகஹதென்ன, ஜன உதான கிராமத்தில் 166 ஆம் இலக்க முகவரியில் பீவீ 117899 என்ற இலக்கத்தின் கீழ் மேற்படி கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இலங்கைப் பொது மக்களிற்கு அறிவிக்கப்படுகின்றது.

சஞ்ஜீவ களுஆரச்சி,
கம்பனிச் செயலாளர்கள்.

5- 626

## வெளிநாட்டு அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

பிலியந்தல, மாமபே கிழக்கு, மஹரகம பாதை, 91/4 என்ற இலக்கத்தைச் சேர்ந்தவர்களும் தற்போது அமெரிக்க ஐக்கிய இராச்சியம் Nevada 89110, Las Vegas, 203 Amber Ridge, sturgeon 316 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவர்களுமான நாங்கள் நிஷாந்த பண்டிதரத்ன ( 690893924V) மற்றும் மொறட்டுவகே திஷாகா தமயந்தி பண்டிதரத்ன (748020942V) ஆகிய நாங்கள் 2015, யூன் 19 ஆம் திகதிய பிலியந்தல, மடபாத்த தூடுவ பாதை, 24 ஆந் இலக்கத்தைச் சேர்ந்தவரும் ரவீந்திர ஸ்ரீ பண்டிதரத்ன (772823088V) என்பவருக்கு எம்மால் வழங்கப்பட்ட வெளிநாட்டு அற்றோணித்தத்துவமானது இல்லாதொழிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதனால் 2017, ஏப்பிறல் 02 ஆந் திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையில் மேற்குறிப்பிட்டுள்ள ரவீந்திர ஸ்ரீ பண்டிதரத்னவினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை/ செயற்பாட்டிற்கும் நாம் பொறுப்பாளிகளல்ல என்பதை பொதுமக்களுக்கு அறிவித்துக் கொள்கின்றோம்.

நிஷாந்த பண்டிதரத்ன-
மொறட்டுவகே விசாகா தமயந்தி பண்டிதரத்ன.

2017, ஏப்பிறல் 2.

5-428

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹரகம, தம்பஹேண வீதி, சமன் உயன, இலக்கம் 2/14 என்ற இடத்தில் வதியும் தே.அ.அ.இல. 783270048V ஐ உடைய ரத்நாயக்க முதியன்சேலாகே மலித ஒஸன்த ஆகிய என்னால், பாதுக்க, பொரோகெதர,இலக்கம் 21/ஏ இல் வதியும் ரத்நாயக்கா முதியன்சேலாகே சிரிபால என்பவருக்கு வழங்கப்பட்ட 2011.07.30 அன்று பிரசித்த நொத்தாரிசு ஐ.எச். செனரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1120 ஆம் இலக்க விசேட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு செயலிழக்கச் செய்யப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

ரத்நாயக்க முதியன்சேலாகே மலித ஒஸன்த.

2017, ஏப்பிறல் 21.

5-432

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹரகம, டெம்பல் வீதி, இல. 111/6 ஐச் சேர்ந்த ராணி குணபாலி கருணாரத்ன ( தே.அ.அ.இல. 485020900V) உரித்தாளர் ஆகியநான், மேற்கூறப்பட்ட 1614 ஆம் இலக்க மேற்படி அற்றோணித்தத்துவத்தில் நிர்ணயிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் விவகாரங்களில் எனது உண்மையானதும் சட்டபூர்வமானதுமான அற்றோணியாக செயற்படுவதற்கு மேற்கூறப்பட்ட இலங்கைக் குடியரசில் , மஹரகம, டெம்பல் வீதி, டெம்பல் லேன், இல. 111/6 என்ற அதே முகவரியைச் சேர்ந்த டெகம்படகே சண்ட்ராணி மல்லிகா குறுப்பு (தே.அ.அ.இல. 556841055V) உரித்தாளர் என்னால் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட ஏ.எம்.எஸ். அமரகோன் பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.11.20 ஆந் திகதியிடப்பட்ட 1614 ஆம் இலக்க அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றது.

இத்தால் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதாவது இது முதற்கொண்டு மேற்படி டெகம்படகே சண்ட்ராணி மல்லிகா குறுப்புவினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல் அல்லது செயல்களுக்கும் நான் பொறுப்பாக இருக்க மாட்டேன் என்பதாகும்.

2017, ஏப்பிறல் 29 ஆந் திகதிய கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது

ராணி குணபாலி கருணாரட்ன,
அவரது அற்றோணிதாரர் மூலம்.

5- 520

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தன்ஸ்டன் அபேவீர குணவர்தன ஆகிய இலக்கம் 60/1, பெல்வத்த, கபடா வீதி, மாத்தறையைச் சேர்ந்த நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவிப்பதாவது: இலக்கம் 83A, இசுறு பிளேஸ், மாகண்டன, மடபத ஆகிய இடத்தைச் சேர்ந்த திலக் ரேணுகா அபேவீர குணவர்தன ஆகியவரை நியமிக்கும் இலக்கம் Kast/ CONS/ 2008/ POA/17 ஐ

உடைய 2008.03.02 ஆம் திகதியிடப்பட்ட குவைத்தின் இலங்கைத் தூதுரகத்தில் இரண்டாம் செயலாளரினால் உறுதிசெய்யப்பட்ட சிறப்பு அற்றோணித்தத்துவத்தை இத்துடன் உடன் விளைவுடன் இரத்துச் செய்து நீக்கி தள்ளுபடி செய்துகொள்கின்றேன். இனிமேல் குறிப்பிட்ட அற்றோணியினால் என் சார்பாக மேற்கொள்ளப்படும் எவ்வித எதிர்கால செயல்களுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

தன்ஸ்டன்அபேவீர குணவர்தன.

5-523

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கம்புறுப்பிட்டி, மாப்பலான, 'லதா செவனவில்' வதியும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 671462092V ஐ உடைய வர்ணகுல அநுர ஆகிய என்னால் கொழும்பு 10, மருதானை, குப்பியாவத்தை, ஜயசேகராராமையில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 593561461 V ஐ உடைய வண. மாபலாணே சாந்த ஹிமிக்கு வழங்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி புஷ்பா டீ சக்கொட ஆரச்சியினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1766 ஆம் இலக்க 2004.01.20 ஆம் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் உடனடியாக செயற்படும் விதமாக செயலிழக்கச் செய்யப்பட்டு இரத்துச் செய்யப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் , பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுவதுடன் இது முதற்கொண்டு மேற்படி 1766 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைகள் தொடர்பாகவும் எனக்குத் தொடர்பில்லையென இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகின்றது.

வர்ணகுல அநுர.

கம்புறுப்பிட்டி.
2017, மே 04.

5- 524

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 308/1/F இம்பத்தான, முல்லேரியாவ, புதிய நகர் என்ற முகவரியைச் சேர்ந்த தீப்தி பிரியங்கர பெர்ணான்டோ அபயசிங்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் த.இல. 308/1/F இம்பத்தான, முல்லேரியாவ, புதிய நகர் எனும் முகவரியைச் சேர்ந்த அத்தாவுட முதியன்சலாகே மஞ்சுளா பிரியாங்கனி போகாகெதர (தே.அ.அ.இல. 717352297V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிவு கே. வீ. சிறிசேன அவர்களால் 2008.10.23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 491 ஆம் இலக்க அற்றோணித்தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்கின்றேன் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் என் சார்பில் செய்யப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன் என்றும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

தீப்தி பிரியங்கர பெர்ணான்டோ அபயசிங்க .

இல. 308/1/F ஹிம்புட்டான,
முல்லேரியாவ புதிய நகர்.

5- 531

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பெலிஅத்த, தங்காலை வீதி, நிலுபுல் இல் வதியும் தியோக்சோ சோய் ஆமன்த இமேஷ் விஜேதுங்க ஆகியோர் மியன்க் மூன் ஓடோ டெக் பிறைவேட் லிமிட்டட் (பீ .வீ. 109013) எனும் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக அந் நிறுவனத்திற்காக மாத்தறை தொடமுன வெல்லவத்த வீதி, இல. 70 இல் வதியும் அஜித் ஹெட்டி ஹேவாவிற்கு அளிக்கப்பட்டிருந்த பிரசித்த நொத்தாரிசு திலினி தென்னகோன் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 56 ஐ உடைய 2015.10.22ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழிக் கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் மக்களிற்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

ஆமன்த இமேஷ் விஜேதுங்க.

5-567

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 05, எல்விட்டிகல மாவத்தை, இல. 533/1ஏ (இலங்கைக் கடவுச்சீட்டு இலக்கம் m 1704614) மற்றும் தற்போது அவுஸ்திரேலியா விக்டோரியா, 3083, புண்பூ ராலூரின் எஸ்டி, இல. 9 இல் வசிக்கும் திரு. வெலண்டெஸ் செட்டென் பெர்ணாந்து ஆகிய நான், என்னால் இல. 533/1ஏ எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5, (தே.அ.அ.இல. 620520683V ) இல் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே ஜயம்பதி ரவீந்திர ஹேரத் என்பவருக்கு வழங்கப்பட்ட இல. 112, 2006.01.05 ஆம் திகதியுடைய பிரசித்த நொத்தாரிசு எச்.எல்.வீ.எஸ். ஈ. சில்வா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவமானது 2017.04.17 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை அரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

வெலண்டெஸ் செட்டென் பெர்ணாந்து.

2017.04.17

5-586

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

Spain , Cp 28046, 3 madrid, 2a, 91, delacastellana, paseo இல் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள UTE setapi Ellips

Anamaduwa, வின் (கூட்டு முயற்சி ) ஏக முகாமையாளரான Alejandrotuduri Zickerman ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்வதாவது, இலங்கை, கல்கிஸ்ஸை, வட்டரப்பல வீதி, இல. 40 ஐச் சேர்ந்த பொன்னையா சிவசுப்ரமணியம் (தே.அ.அ.இல. 370723370V உரித்தாளர்) எமது சட்டரீதியான அற்றோணித்தத் துவதாரராக நியமிக்கப்பட்டு, மெட்ரிட் பிரசித்த நொத்தாரிசு de D fernando Dela cqmera Garcia வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, மே 3 ஆம் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் இது முதற் கொண்டு இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக் கப்படுவதாகவும், இது முதற் கொண்டு எமது சார்பாக அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல்கள், விடயங்கள் அல்லது நடவடிக்கைகளுக்கு நாம் பொறுப்பாக இருக்க போவதில்லை என்பதாகும்.

Alejandrotuduri Zickerman ,
UTE setapi Ellipse Anamaduwa.
ஏக முகாமையாளர்,

5-603

# ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

(டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ யின் பதிலாள்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**248 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்**

**தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், கிருவா பற்று கிழக்கு, அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட அம்பலாந்தோட்டை வடக்கு கிராம அலுவலா பிரிவில் அம்பலாந்தோட்டை நகர் 07 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் வை.எம்.பீ.பி.கருணாசுந்தர அவர்களால் வரையப்பட்ட 1973 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட 211A ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ள கல்லேலிதொட்ட மற்றும் தன்கஹவத்த ஆகிய ஒன்றிணைக்கப்பட்ட காணிகளின் துண்டுகள் 01, 02, 15, 16, 34, 35, 36, 31, 32, 33, 37 மற்றும் 38 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் மீள் அளவை மற்றும் உப பிரிவான பீ.பி. இலங்கசிங்க அவர்களால் வரையப்பட்ட 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட Ha/6004ஆம்இலக்க வரைபடத்தில் துண்டு A எனக் குறிப்பிடப் பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்ட துமான காணித்துண்டு.**

**காணியின் விஸ்தீரணம்:**

**01 ஏ. 02.றூ. 04 பே.**

**குறித்த Ha/6004 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிலுள்ள மண், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக**

**மேலே கூறப்பட்ட அம்பலாந்தோட்டை நகர் 07 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் வை.எம்.பீ.பி.கருணாசுந்தர அவர்களால் வரையப்பட்ட 1973 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட 211A ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப் பட்டுள்ள கல்லேலிதொட்ட மற்றும் தன்கஹவத்த ஆகிய ஒன்றிணைக்கப்பட்ட காணிகளின் துண்டுகள் 01, 02, 15, 16, 34, 35, 36, 31, 32, 33, 37 மற்றும் 38 எனக் குறிப்பிடப் பட்டுள்ள காணியின் மீள் அளவை மற்றும் உப பிரிவான பீ.பி. இலங்கசிங்க அவர்களால் வரையப்பட்ட 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட Ha/ 6004 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு B எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்ட துமான காணித்துண்டு.**

**காணியின் விஸ்தீரணம்: 01 ஏ. 00.றூ. 05 பே.**

**குறித்த Ha/6004 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிலுள்ள மண், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக**

ஹம்பாந்தோட்டை பிரசித்த நொத்தாரிசு சனத் நாணயக்கார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 06 ஆந்திகதியிடப்பட்ட 248ஆம் இலக்க பிணை உறுதி மூலம் ஹம்பாந்தோட்டையில் வசிக்கும உடுகம கொரலலாகே தனுஷிகா தரங்கனி பெரேரா மற்றும் சமன் பண்டுல ஹேவா கொடுப்பிலி தர்மவில்லா ஆகியோரினால் எப்சீசீ வங்கி பீஎல்சீக்கு ( டிஎப்சீசீ வர்தன வங்கி பிஎல்சி யின் பதிலாள்) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டீஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி 2017ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 1,25,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 1000 ரூபா;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் பீஎல்சீ சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
125 வருடகால மகோன்னத சேவை.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் |
| 24, டொரிங்டன் வீதி, | காட்சியறையும்: |
| கண்டி. | 290, ஹவ்லொக் றோட், |
| | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 |
| | 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ்: 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@ sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@ samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

5-525

**பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ( மத்துகம பதிவுப் பிரிவிற்குள்) , பஸ்துன் கோறளை, இத்தகொடை பற்று, தொடங்கொடை பிரதேச சபை எல்லைகளுக்குள், தொடங்கொட பிரதேச செயலாளர் பிரிவு, இல. 800 எவ்- தொடங்கொடை மேற்கு கிராம அலுவலர் பிரிவு, தொடங்கொடையில் அமைந்துள்ளதும் பிளமினாவத்தை, 9 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பு் ல. 44 ஐக் கொண்டதும் "புனித பிலோமினா எஸ்டேட்" என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. செனவிரத்னஅவர்களால் தயாரிக்கபப்ட்டு 1984, செத்தெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட வரபடம் இல. 3944 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 205 (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. செனெவிரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1984, பெப்புருவரி 10 ஆம் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3791 இல் குறிப்பிடப்பட்ட காயிணின் பாகத்தின் உப பிரிவாக இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டுள்ளதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை.**

**( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 22.5பே.)**

*(கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான விஜயமான்ன லியன ஆரச்சிலாகே குமுதுனி மாரிஸ்ரெல்ல மற்றும் ஈடுவைத்தவர்ரான மரினா ரோஸ் வேர்ஜினி பெரேரா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு பீ.எஸ். என். ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016, மே 17ஆந் திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டு முறி இல. 5757 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்).*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- கொழும்பிலிருந்து, கொழும்பு- ஹம்பாந்தோட்டை வீதிவழியே வெல்லவாய "A2" பெருவீதியில் ஏறக்குறைய 200 மீற்றரிலுள்ள 45 கி.மீற்றர் மைல் கல்லை கடந்து ,கட்டுகுருந்தை சந்தியை அடைந்து அங்கிருந்து மத்துகமை வீதியில் இடப்பக்கம் திரும்பி 200 மீற்றரில் 4/3 கல்வெட்டைக் கடந்து ,இடப்பக்கத்தில் "Y" சந்தியில் ஏறக்குறைய 150 மீற்றருக்கு அப்பால், வலப்பக்கத்தில் ஏறக்குறைய 150 மீற்றருக்கு அப்பால் 9 ஆவது ஒழுங்கை இருக்கின்றது, விற்பனைக்குரிய காணி வலதுபக்கத்திலி இருக்கின்றது.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங்களை முறையே 2017, யூன் 06 ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- 2017.05.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய "த ஐலன்ட் ", "லக்பிம" மற்றும் "தினக்குரல் "ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. விளம்பரச் செலவுக் கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம்;
6. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா மற்றும் விற்பனையில் உறப்பட்டட வேறேதேனும் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ( தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் , ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் " கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667412/ 011-4667237, 011-4667229.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
மாவில்மட,
கண்டி
தொலைபேசி ,தொலைநகல்: 081-2210595.
செல்லிட தொலைபேசி இல. : 071-44755974, 071-4962449

5-598

**பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மத்திய மாகாணம்,கண்டி மாவட்டம்,( கண்டிப் பதிவுப் பிரிவிற்குள்), கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபை எல்லைகளுக்குள், கடவச்சத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளர் பிரிவு, உடபோவல கிராம அலுவலர் பிரிவு, கோணவத்தையில் அமைந்துள்ளதும், "டீ சொய்சா எஸ்டேட்" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஆர்.எல்.கே. ஜயசுந்தர அவர்களால் தயாரிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டு சனவரி 14 மற்றும் 15 ஆம் திகதியிடப்பட்ட வரைபட இல. ஜே 2487 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 11 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து அத்துடன் துண்டு 13 என அடையாளமிடப்பட்ட வீதிவழி உபயோகத்திற்கான உரிமையுடன் சேர்த்து ஏல விற்பனை.***

***( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 15.71பே.)***

*(கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான அளுத்கே முதியன்சலாகே நிலன்த ஆனந்த ஜயரத்ன பிரசித்த நொத்தாரிசு நிலினி வேகொடபொல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016, சனவரி 19 ஆம் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 1702 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்).*

***ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.***- கண்டி நகரிலிருந்து குண்டசாலை வீதிவழியே தென்னம்கும்புறவரை ஏறக்குறைய 07 கிலோமீற்றர் சென்று ரன்தெனிகல வீதி ராஜமாவத்தை வழியே ஏறக்குறைய 05.2 கிலோமீற்றர் சென்று இடப்பக்கம் திரும்பி ரிவர் வியூ, கார்டின் வீதி (மோட்டார் வண்டி செல்லக்கூடிய தாரிடப்பட்ட வீதி ) வழியே வீதிக்கு பக்கத்தில் அமைந்துள்ள ஆதனத்தை அடைவதற்கு ஏறக்குறைய 700 மீற்றர் செல்லவும்

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங்களை முறையே 2017, யூன் 07 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- 2017.05.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய "த ஐலன்ட் ", "லக்பிம" மற்றும் "தினக்குரல் "ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. விளம்பரச் செலவுக் கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம்;
6. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா மற்றும் விற்பனையில் உறப்பட்ட வேறேதேனும் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ( தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் , ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன்ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667412/011-4667237, 011-4667229.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
மாவில்மட,
கண்டி
தொலைபேசி /தொலைநகல்: 081-2210595.
செல்லிட தொலைபேசி இல. : 071-44755974, 071-4962449

5-599